20 DEC 2022
சென்னை-03

<u>சுருக்கம்</u>

விளையாட்டு – முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப்போட்டிகள் 2022-2023 முதல் நிருவாக அனுமதி மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான தொடர் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை

அரசாணை (நிலை) எண்.88

நாள்: 19.12.2022
சுபகிருது – மார்கழி 4,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது:

1. 44வது செஸ் ஒலிம்பியாட் நிறைவு விழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு (இயக்குநர், தகவல் மற்றும் மக்கள்தொடர்பு அவர்களின் செய்தி வெளியீடு எண்.1367, நாள்: 09.08.2022)
2. விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கிய விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு (இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு அவர்களின் செய்தி வெளியீடு எண்.1571, நாள்: 12.09.2022)
3. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலரின் கடித ந.க.எண்.9615/எஸ்2/2022, நாள் 27.09.2022 மற்றும் 26.11.2022

-----

<u>ஆணை:-</u>

பார்வை 1ல் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 44வது செஸ் ஒலிம்பியாட் நிறைவு விழாவின் போது, "ஒலிம்பிக் விளையாட்டுகள் மற்றும் கபடி, சிலம்பாட்டம் ஆகிய இரண்டு பாரம்பரிய விளையாட்டுகளுக்காக மாநில மற்றும் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் விரைவில் நடைபெற உள்ளது" என அறிவித்தார்கள்.

2. பார்வை 2ல் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கு விருதுகள் மற்றும் உயரிய ஊக்கத் தொகை வழங்கி ஆற்றிய உரையில், உலக அளவில் விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு முதன்மை பெற வேண்டும் எனவும், தமிழ்நாட்டிலிருந்து நமது வீரர்கள் அனைவரும் சர்வதேச விளையாட்டுகளிலும் பங்கேற்க வேண்டும், பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும்

என தெரிவித்து முதலமைச்சர் கோப்பை போட்டிகளுக்கான முன்பதிவினை தொடங்கிவைத்தார்.

3. பார்வை 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர், 2022-23-ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளில் இப்போட்டிகளை சிறந்த முறையில் நடத்திட பல்வேறு வழிகாட்டி நெறிமுறைகளை தெரிவித்ததுடன் இணைப்பில் உள்ளபடி, இப்போட்டிகளை நடத்துவதற்கு ரூ.47,04,72,800/- (ரூபாய் நாற்பத்தேழு கோடியே நான்கு லட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து தக்க அரசாணை வழங்கிடுமாறு கேட்டுக் கொண்டதுடன், அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை வழங்கிட ஆவன செய்யதிடுமாறு அரசிடம் கோரியுள்ளார்.

4. மேலே பத்தி 3-இல் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் அவர்களின் கருத்துருவினை ஏற்று முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை பின்வருமாறு நடத்திட அரசு ஆணையிடுகிறது.

I. <u>முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் பிரிவுகள்</u>

| வ. எண் | பிரிவுகள் (ஆண்கள் மற்றும் பெண்கள் ) | வயது வரம்பு | போட்டிகள் |
|---|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு | 15 முதல் 35 வரை | 1) கபடி (Kabaddi)<br>2) சிலம்பம் (Silambam – 5 Events)<br>3) தடகளம் (Athletics – 4 Events)<br>4) இறகுப்பந்து (Badminton –2 Events)<br>5) கையுந்துபந்து (Volleyball) |
| 2 | பள்ளி | 12 முதல் 19 வரை | 1) கபடி (Kabaddi)<br>2) சிலம்பம் (Silambam – 5 Events)<br>3) தடகளம் (Athletics –10 Events)<br>4) கூடைப்பந்து (Basketball)<br>5) இறகுப்பந்து (Badminton – Singles & Doubles)<br>6) கால்பந்து (Football)<br>7) வளைகோல்பந்து (Hockey)<br>8) நீச்சல் (Swimming – 5 Events)<br>9) மேசைப்பந்து (Table Tennis –2 Events)<br>10) டென்னிஸ் (Tennis – 2 Events)<br>11) கையுந்துபந்து (Volleyball)<br>12) பளுதூக்குதல் (Weightlifting – 5 Events)<br>13) கடற்கரை விளையாட்டுப் போட்டிகள்(Beach Games – Volleyball – 2 Players) |
| 3 | கல்லூரி | 17 முதல் 25 வரை | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | மாற்றுத் திறனாளி | வயது வரம்பு இல்லை | மாற்றுத்திறனாளி (Differently Abled) | 1) 50 மீ ஓட்டப் பந்தயம் (50 Mtr Run)<br>2) இறகுப்பந்து (Badminton – 5 Player)<br>3) மேசைப்பந்து (Table Tennis –Doubles) |
| | | | பார்வைத்திறன் மாற்றுத்திறனாளி (Visually Impaired) | 1) 100 மீ ஓட்டப்பந்தயம் (100 Mtr Run)<br>2) சிறப்பு கையுந்துபந்து (Adapted Volleyball – 7 Players) |
| | | | மனவளர்ச்சி குன்றியோர் (Intellectually challenged) | 1) 100 மீ ஓட்டப்பந்தயம் (100 Mtr Run)<br>2) எறிபந்து (Throw Ball –7 Players) |
| | | | செவித்திறன் மாற்றுத்திறனாளி (Hearing Impaired) | 1) 100 மீ ஓட்டப்பந்தயம் (100 Mtr Run)<br>2) கபடி (Kabaddi –7 Players) |
| 5 | அரசு ஊழியர் | வயது வரம்பு இல்லை | 1) கபடி (Kabaddi)<br>2) தடகளம் (Athletics – 4 Events)<br>3) இறகுப்பந்து (Badminton – Singles & Doubles)<br>4) கையுந்துபந்து (Volleyball)<br>5) செஸ்(Chess –1 Player) | |

போட்டிகளை பொதுமக்கள், பள்ளி, கல்லூரி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் என ஐந்து பிரிவுகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலரும் பங்கேற்கும் வகையில் நடத்தப்படும். போட்டிகளின் பட்டியலை ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர், அந்த ஆண்டின் சூழலுக்கேற்ப முடிவு செய்வார்.

II. பளு தூக்குதல், கடற்கரை கையுந்துப் பந்து மற்றும் டென்னிஸ் விளையாட்டுகள் மண்டல அளவில் நடத்தப்பட்டு வெற்றிபெறும் அணிகள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வார்கள். பிற விளையாட்டுகள் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வர்.

III. முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான போட்டிகள் அனைத்தும் அரசு முடிவு செய்யும் இடத்தில் தனித்தனியாக நடத்தப்பட வேண்டும்.

IV. பொதுப்பிரிவு மற்றும் அரசு ஊழியர்களுக்கு நடத்தப்படும் போட்டிகளில் வெற்றி பெறும் அணிகள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வார்கள்.

V. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு மாவட்ட அணிகளின் சார்பாக மாநிலப் போட்டிகளில் கலந்து கொள்வர்.

VI. தனி நபர் போட்டிகளில் தரவரிசையின்படி சிறந்த வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வார்கள்.

VII. பொதுப்பிரிவில் உயரிய நிலையில் உள்ள அணிகள் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான இறுதி போட்டிகளில் கலந்து கொள்வார்கள்.

VIII. இப்போட்டிகளில் பங்கேற்கும் அணி வீரர்கள், பயிற்றுநர்கள் மற்றும் மேலாளர்கள் அனைவருக்கும் குழுகாப்பீடு எடுக்கப்பட வேண்டும்.

IX. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12.09.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டபடி, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் அனைவரின் அனைத்து விவரங்களும் (அதாவது வீரர்களின் குழு மற்றும் தனி நபர்கள்) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணையதளம் வாயிலாக பதிவு செய்யப்பட வேண்டும்.

X. மாவட்ட மற்றும் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் முதல் 8 இடங்களில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். வருங்காலங்களில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு இச்சான்றிதழ்களை பயன்படுத்தும் பொழுது அதன் மெய்த்தன்மையை எளிதில் கண்டறிய ஏதுவாக அனைத்து சான்றிதழ்களும் Digilocker முறையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

XI. போட்டியில் திறமையானவர்கள் கண்டறிவதற்கான (Talent Hunt) நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு கண்டறியப்படும் திறமையான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை SDAT விளையாட்டு விடுதிகள் மற்றும் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் நேரடியாக சேர்த்து தொடர் பயிற்சிகள் வழங்கவும், மேலும், இப்போட்டிகளில் சிறப்பாக வெற்றிபெறும் மாணவ மாணவியர் மற்றும் அரசு ஊழியர்கள் தமிழ்நாடு அணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய அளவிலான பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு போட்டிகள், பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள், "விளையாடு இந்தியா" (கேலோ இந்தியா) போட்டிகள், அகில இந்திய அளவிலான குடிமைப்பணியாளர்கள் போட்டிகள் உள்ளிட்டவற்றுக்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதில் இடம்பெற்றுள்ள விளையாட்டு போட்டிகளுக்கான

அணிகள் தேர்வு முதலமைச்சர் கோப்பை போட்டிகள் மூலம் மட்டுமே நடைபெற வேண்டும்.

XII. முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் சிறந்த முறையில் நடத்தப்படுவதை ஒருங்கிணைக்க அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அவர்களின் தலைமையில் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு (State Level Coordination Committee), போட்டிகள் நடத்துவது, பாதுகாப்பு ஏற்பாடுகள், மருத்துவ உதவிகள், தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகளை பயன்படுத்துவதை கண்காணித்து தடுத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதற்காவும் போட்டிகள் முறையாக நடத்தப்பட்டு தகுதியான வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காகவும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்குழு (District Youth Welfare and Sports Development Committee) மற்றும் போட்டிகளை ஏற்பாடு செய்திட மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்தும் குழு (District level Organising Committee) ஆகிய மூன்று குழுக்கள் இணைப்பு 1-ல் உள்ளவாறு அமைக்கப்படுகிறது. மேற்படி மூன்று குழுக்களின் பொறுப்புகள் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

XIII. முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்திடவும், நிருவாக செலவினங்களுக்காகவும் ரூ.47,04,72,800/- (ரூபாய் நாற்பத்தேழு கோடியே நான்கு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) பின்வருமாறு நிருவாக (Administrative sanction) அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | நிதி | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | மாவட்ட அளவிலான அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெறும் வீரர்களுக்கான பரிசுத் தொகை | 13,89,60,000 |
| 2 | மாநில அளவிலான அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெறும் வீரர்களுக்கான பரிசுத் தொகை | 10,82,25,000 |
| 3 | 38 மாவட்டங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான செலவினங்கள் | 5,89,00,000 |
| 4 | மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் நிறைவு விழா நடத்துதல் | 16,43,87,800 |
| | மொத்த செலவினம் | 47,04,72,800 |

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு தேவையான நிதி ரூ.47,04,72,800/- (ரூபாய் நாற்பத்தேழு கோடியே நான்கு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து

எண்ணூறு மட்டும்) 2023-24-ஆம் ஆண்டு முதல் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் (BE) வழங்கப்படும்.

5. முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டி முதன்முறையாக இவ்வாறாக நடத்தப்படுவதால், இப்போட்டிக்கு வழங்கப்படும் ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீட்டில் எவ்விதமான மாற்றமும் / கூடுதல் செலவினமும் இல்லாமல், உட்கூறுகளை மாற்றுவதற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி-4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2204-00 விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் - 104 போட்டி விளையாட்டுகளும், விளையாட்டுகளும் -மாநிலச் செலவினங்கள் - KT முதலமைச்சர் விருது மற்றும் பரிசுக்கோப்பைகளை வழங்கிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு மானியங்கள் - 309 உதவித் தொகை - 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை" (த.தொ.கு.2204 00 104 KT 30903)

7. மேலே பத்தி-4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்:-

"K வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (B) வட்டிபெறா வைப்பீடுகள் - 8443 00 உரிமையியல் வைப்பீடுகள் - 800 ஏனைய வைப்பீடுகள்- CH -தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வைப்பீடுகள் - 801-வரவுகள் 02 வட்டி பெறாதவை

(IFHRMS தா.தொ.கு 8443 00 800 CH 80102) (வரவுகள்)

8. மேலே குறிப்பிடப்பட்டுள்ள செலவினம் குறித்த விவரங்களுடன் பயன்பாட்டுச் சான்றிதழையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் உரிய காலத்தில் அரசுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார். மேலும், பல்வேறு செலவினங்களுக்கான விவரங்கள் உரிய பதிவேடுகளில் பதிந்து முறையாக பராமரிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 53960/நிதி (கல்வி-I)/2022, நாள் 19.12.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை- 03.

மாநில தலைமை கணக்காயர், சென்னை- 18.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-9.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9

மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை ) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை-9

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை-9.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், உள், மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை துறை, சென்னை-9.

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை, சென்னை-9.

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், உயர் கல்வித் துறை, சென்னை-9.

அரசு செயலாளர் அவர்களின் தனிச்செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.

தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகளின் கூடுதல் தலைமைச் செயலாளர் / முதன்மைச் செயலாளர் / செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-9

அரசு துணைச் செயலாளர் / அரசு சார்புச் செயலாளர்,
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சென்னை-9.

நிதி (கல்வி-1/வ.செ.பொ-1&2/வ.வ-I)துறை, தலைமைச் செயலகம், சென்னை-09.

அனைத்து குழு உறுப்பினர்கள் (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வழியாக)

இ.கோ / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்